**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 403/2022** Date: 14.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 11** |
| Name | : | விஜயா, காவல் உதவி ஆய்வாளர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 14.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பாலக்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 17.08.2021 ம் தேதி மாலை 18.00 மணிக்கு நிலைய அலுவலிலிருந்தபோது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. சௌந்தர்ராஜன் என்பவர் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த பெருமாள் மகன் கோகுல்ராஜ் என்பவர் அடிதடி வழக்கில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தவரிடம் பெற்றுவந்த வாக்குமூலத்தை என்னிடம் ஆஜர் செய்ததை பெற்று மனுரசீது எண். 272/2021 ஆக பதிவுசெய்தேன். மேற்படி மனுவினை பரிசீலனை செய்து 18.08.2021 ம் தேதி காலை 6.00 மணிக்கு மதிகொண்பாளையம் காவல் நிலைய குற்ற எண். 304/2021 சட்டப்பிரிவுகள் 147, 448, 447, 427, 294(b), 323, 324, 506(2) இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும்.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் வாக்குமூலத்தையும் இணைத்து நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

2. அதன் ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான முத்துப்பட்டி கிராமத்திலுள்ள வாதியின் வீட்டிற்கு காலை 8.00 மணிக்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் வெங்கடேசன், ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.11 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12 ஆகும்.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 8.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து 1. மரக்கட்டை –நீளம் 74.5 cm , சுற்றளவு – 14.5 cm , மேல்சுற்றளவு – 12 cm அளவுகொண்ட கட்டை, 2. சுமார்

83.5cm நீளம் கொண்ட இரும்பு கம்பி – ஒன்று, 3. சுமார் 74 cm நீளம் கொண்ட இரும்பு கம்பி ஒன்று, 4. சுமார் 69.5 cm நீளம் கொண்ட தேங்காய் உறிக்கும் மெசின் ஒன்று, 5. சுமார் 29.5 cm நீளம் கொண்ட தோசை கரண்டி ஒன்று, 6. A4 vision AMD என்ற உடைந்த நிலையிலுள்ள லேப்டாப், 7. உடைந்த நிலையிலுள்ள Redmi செல்போன் ஒன்று , TN 29 BT 5364 என்ற TVS Jupiter இருசக்கர வாகனம் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.13 ஆகும். படிவம் 91 அ.சாஆ.14 ஆகும்.**

3. அன்றைய தினமே சாட்சிகள் கோகுல்ராஜ், பெருமாள், செல்வம், கௌரி, தேவி, வெங்கடேசன், ஆறுமுகம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மீண்டும் 19.08.2021 ம் தேதி எதிரிகளை தேடிச்சென்றபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவரின் பேரில் தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனை பேருந்து நிறுத்தத்தில் நின்றுக்கொண்டிருந்த 1 வது எதிரி சின்னசாமி, 2 வது எதிரி ஆறுமுகம் ஆகியோரை சாட்சி அடையாளம் காட்ட எதிரிகளிடம் கைதுசெய்யும் காரணத்தை கூறி அன்றைய தினம் 14.15 மணிக்கு கைதுசெய்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான சரத்குமார், முனியம்மாள், லாவன்யா, வேடியம்மாள், சிவக்குமார் ஆகியோர் முன்ஜாமின் பெற்றுவிட்ட படியால் அவர்களை இவ்வழக்கில் கைதுசெய்யவில்லை. வழக்கின் மேல் விசாரணைக்காக கோப்பை காவல் ஆய்வாளர் திரு.அம்மாதுரை அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. இருதரப்பினருக்குமிடையே உரிமையியல் வழக்கு சம்பவ காலத்தில் நிலுவையில் இருந்த விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் தற்போது நினைவில்லை. வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்களின் நீளம் துல்லியமாக சொல்லும் பட்சத்தில் அது சம்பவ இடத்தில் வைத்து டேப் மூலம் அளக்கப்பட்டதா என்றால் அவ்வாறு தான் அளந்தேன். பார்வைமகஜர் சாட்சிகள் டேப் மூலம் வழக்கு சொத்துக்கள் அளவீடு செய்யப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. வழக்கு சாட்சிகளை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன், கோகுல்ராஜ் என்பவரை மட்டும் அரசு மருத்துவமனையில் விசாரித்தேன். 1,2 எதிரிகளை கைதுசெய்வதற்காக அடையாளம் காண்பித்த நபரை சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் பெருமாள் என்பவரை விசாரித்துள்ளேன். எனது விசாரணையின்போது பெருமாள் 1,2 எதிரிகளை அடையாளம் காட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான், அவர் வாக்குமூலம் பதிவுசெய்த மறுநாள் தான் எதிரிகளை கைதுசெய்தேன்.

2. 1,2 எதிரிகளை கைதுசெய்ததாக சொல்லப்படும் இடம் அதிக பொதுமக்கள் நடமாடக்கூடிய பகுதி என்றால் சரிதான். எதிரிகள் தரப்பில் 1 ம் எதிரி கொடுத்த புகாரின்பேரில் கோகுல்ராஜ் தரப்பினர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது விசாரணையின் முடிவில் அது பிழையுடையதாக

தெரியவந்து Refer செய்யப்பட்டது. இவ்வழக்கின் 1 மற்றும் 2ம் எதிரிகள் சம்பவத்தின்போது காயம்பட்டு மருத்துவமனையில சிகிச்சையிலிருந்தவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி அவர்களை கைதுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் பெருமாள் எனது விசாரணையில் எதிரிகளை அடையாளம் காட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பப்பட்டது என்றால் 18.08.2021 ம் தேதி. முதல் தகவல் அறிக்கை நான் சொன்ன 18.08.2021 ம் தேதிஅனுப்பப்படவில்லை என்றும், பின் யோசனை செய்து 19.08.2021 ம் தேதிதான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இருதரப்பினருக்குமிடையே வழித்தடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்துவந்தது என்றால் சரிதான். கோகுல்ராஜ் மற்றும் அவரது தந்தை பெருமாள் ஆகியோருக்கு மேற்படி வழித்தடம் பாத்தியம் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதையும் நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. பொதுவாக பாத்தியமில்லாத இடத்திற்கு செல்வது அத்துமீறி உள்ளே நுழைவதற்கு சமம் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில், விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், எதிரிகளை சொன்ன நாள் நேரத்தில் கைதுசெய்யவில்லை என்றும், வழக்காவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எதிரிகள் மீது பாரபட்சமாக விசாரணை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.14 15:07:42 +0530